மாகாண கல்வித் திணைக்களம்- வாராந்தப் பாடசாலை

தரம்: 11

வாரம்-33

பாடம்: நடனம்

ஆக்கம்- திருமதி S.சானு பிரியதர்சனி
கே/சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி 1

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. துரோணாச்சாரியாருக்கும் ஏகலைவனுக்குமிடையிலான அன்பு
   1) குரு சிஷ்யன் 2) தாய் சேய் 3) ஆண்டான் அடிமை 4) முதியோர் இளையோர்

2. தவில் செய்யப்பயன்படும் மரம்
   1) மாமரம் 2) வேப்பமரம் 3) பலாமரம் 4) தேக்கமரம்

3. கண்ட ஜாதி ஜம்பை தாளம் எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
   1) 6 2) 8 3) 10 4) 12

4. பல அடவுகள் சேர்ந்து வருவது
   1) ஜதி 2) தீர்மானம் 3) கோர்வை 4) அறுதி

5. இரு கைகளிலும் மிருக சீர்ஷக்கைகள் பிடித்து அபிநயிக்கும் இரட்டைக்கை முத்திரை
   1) கபோதம் 2) அஞ்சலி 3) ஸ்வஸ்திகம் 4) உத்ஸங்கம்

6. அலாரிப்பின் ஆரம்பத்தில் இடம்பெறும் கழுத்தசைவு
   1) சுந்தரி 2) திரச்சீனா 3) பரிவர்த்திதா 4) பிரஹம்பிதா

7. பரத நாட்டியக் கச்சேரி ஒழுங்கில் முதலில் அபிநயத்துடன் ஆற்றுகை செய்யப்படும் உருப்படி
   1) அலாரிப்பு 2) ஜதிஸ்வரம் 3) சப்தம் 4) கீர்த்தனை

8. ஆனந்தத் தாண்டவம் ஆடப்பட்ட இடம்
   1) திருவானைக்கா 2) மதுரை 3) திருவாரூர் 4) சிதம்பரம்

9. சிலப்பதிகாரத்தில் சிறந்த நாட்டியக்கலைஞருக்கு வழங்கப்பட்ட பட்டம்
   1) தலைக்கோலி 2) நாட்டியவாரிதி 3) நர்த்தன சாகரம் 4) நாட்டிய மணி

10. நவக்கிரக ஹஸ்தங்களில் குரு எனப் போற்றப்படுபவர்
    1) செவ்வாய் 2) வியாழன் 3) வெள்ளி 4) திங்கள்

## பகுதி 2

2) **பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக**

அ) கதையை அடிப்படையாகக் கொண்ட கேரள மாநில ஆடல் எது ?

ஆ) இந்த ஆடலின் தோற்றம் , வளர்ச்சி பற்றி எழுதுக.

இ) இந்த ஆடலில் பயன்படுத்தப்படும் ஒப்பனைகளை விளக்குக.